**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**M.C.OP.No.45/2021 - RW-2**

| | |
|---|---|
| Name | திரு.ராம்கிஷோர் |
| Father Name | திரு.ஆர்.கே.மூர்த்தி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **31.07.2026.**

**4-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான். TN-23-CJ-0397 பதிவெண் கொண்ட வாகனத்திற்கான காப்பீடு எங்கள் நிறுவனத்தில் விபத்து தேதியில் ஊர்ஜிதத்தில் இருந்தது என்றால் சரிதான். அந்த வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம், அந்த வாகனத்திற்கான பதிவு சான்று மற்றும் அனைத்து ஆவணங்களும் விபத்து தேதியில் செல்லத்தக்கதாக இருந்தது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை TN-23-CJ-0397 பதிவெண் கொண்ட வாகனத்தின் ஓட்டுநர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் ஓட்டுநர் விடுதலை செய்யப்பட்டுவிட்டார். மோட்டார் சைக்கிள் ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து நடந்ததாக நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியிருப்பது போல் TN-23-CJ-0397 பதிவெண் கொண்ட வாகனத்தின் ஓட்டுநர் மீதான குற்ற வழக்கில் முடிவு செய்யப்படவோ, அதன் அடிப்படையில் அவர் விடுதலை செய்யப்படவோ இல்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த முருகன் என்பவர் எங்கள் நிறுவனத்தை பொறுத்த வரை 3-ம் தரப்பினர் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த முருகன் என்பவர் எங்கள் நிறுவனத்தை பொறுத்த வரை 3-ம் தரப்பினர் என்றாலும், வழக்கிற்காக நான் அதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எங்கள் நிறுவன கள ஆய்வாளர் கொடுத்துள்ள எ.ம.சா.ஆ.13 அறிக்கையில் திருமூர்த்தி என்பவர் மோட்டார் சைக்கிளை மது போதையில் ஓட்டி வந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் எ.மசா.ஆ.14 அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் திருமுருகன் மது போதையில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.13 அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள மகிழுந்தின் ஓட்டுநரின் கடிதம் இணைத்து தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் நிறுவனம் இந்த வழக்கிற்கு ஏற்றாற்போல் அறிக்கை தர சொல்லி கள ஆய்வாளரிடம் கேட்டு எ.ம.சா.ஆ.13 மற்றும் எ.ம.சா.ஆ.14 அறிக்கைகள் உண்மைக்கு புறம்பாக தயார்

செய்யப்பட்டு, எங்களுக்கு சாதகமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. TN-23-CJ-0397 பதிவெண் கொண்ட வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளதால் மனுதாரர்களுக்கு எங்கள் காப்பீடு நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநரும், விபத்தில் பாதிக்கப்பட்டுள்ளார் என்றாலும், அவர் மீது எந்த தவறும் இல்லை என்றாலும், 3, 4 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்படவில்லை என்றாலும் சரியல்ல.

<u>மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

4-ம் எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணையாகவும் பாவித்துக் கொள்ள மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவ்வாறே பதிவு செய்யப்படுகிறது.

<u>மறுவிசாரணை</u>:- இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN Date: 2026.07.31 05:20:34 -0400

I Additional District Judge,
Ranipet.